செய்தி வெளியீடு எண்: 852 நாள்:10.11.2020

## <u>செய்தி வெளியீடு</u>

### <u>சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் 11வது (இரண்டாம் கட்ட) மாநில அளவு அதிகார மேம்பாட்டுக் குழு நடைபெற்ற நாள்– 10.11.2020. 11.00 முற்பகல்</u>

தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கொள்கை குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் திரு.சி.பொன்னையன் அவர்களின் தலைமையில் 10.11.2020 அன்று காலை 11.00 மணியளவில்11 வது (இரண்டாம் கட்ட) மாநில அளவு அதிகார மேம்பாட்டுக் குழுக் கூட்டம் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவில், காணொளி வழியாக நடைபெற்றது. அரசு கூடுதல் தலைமை செயலாளர் (நிதித்துறை), அரசு கூடுதல் தலைமை செயலாளர் (திட்டம் மற்றும் வளர்ச்சி) மற்றும் துறைசார்ந்த உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் திருமதி. ஜெயஸ்ரீ ரகுநந்தன், இஆப., அரசு கூடுதல் தலைமை செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, முனைவர். பு.செ. அர்ச்சனா கல்யாணி, இ.வ.ப., குழுமத் தலைவர் (நிலப் பயன்பாடு) மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு, திருமதி. கே.எம். சரயு, இ.ஆ.ப., திட்ட இயக்குநர், சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் பிரிவு–1, உதகமண்டலம், திரு. எம். வடிவேல், கூடுதல் இயக்குநர், மாநகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் விநியோகம், திருமதி. மது இந்திரா பிரியதர்ஷினி, உதவி இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

2015–16 மத்திய வரவு செலவு திட்டத்தில் 2015–16–ஆம் ஆண்டு முதல் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்களுக்கான மத்திய அரசின் நிதியுதவி நிறுத்தப்படும் என்று அறிவித்தது. இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இத்திட்டத்தினை மாநில அரசு தன் சொந்த மாநில நிதி உதவியுடன் தொடர ஆணையிட்டார்கள். அதன் தொடர்ச்சியாக புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2015–16–ஆம் ஆண்டு பட்ஜெட் உரையில் ரூ.75 கோடி நிதி உதவியுடன் தமிழகத்தில் அமைந்துள்ள மலைப்பகுதிகளில் வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டம் அறிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் வழியாக மண் வளப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் வனப்பாதுகாப்பு, தோட்டக்கலை, வேளாண்மை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் மேம்பாடு, கால்நடை வளர்ப்பு, நெடுஞ்சாலை மற்றும் கிராமப்புற சாலைகள் அமைத்தல், நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்பின் கட்டமைப்பில் இடைவெளி நிரப்பும் விதமாக பணிகளை மேற்கொள்ளுதல், வேளாண் உற்பத்தி பெருக்கம், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம், நீர்வள மேம்பாடு மற்றும் மீன் வளர்ப்பு போன்ற பணிகளின் வழியாக தமிழகத்தை நாட்டிலேயே முதன்மை மாநிலமாக திகழ மாண்புமிகு தமிழக முதல்வர்

திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் அனைத்து நடவடிக்கைகளையும் இத்திட்டத்தின் வழியாக செயல்படுத்தி வருகிறார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் இந்த கோவிட்–19 ஊரடங்கு காலத்தில் அரசு நிருவாகச் செலவினத்தை குறைத்தாலும் இத்திட்டச் செலவினை குறைக்கவில்லை. இத்திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கி, 2020–21 நிதியாண்டிற்கு ரூபாய் 75 கோடி திட்டப் பணிகளுக்கு ஒதுக்கீடு செய்துள்ளார்.

இதுவரையில் 2016–2017–ஆம் ஆண்டு முதல் 2019–2020 ஆண்டு வரை ரூபாய் 250 கோடி வழங்கப்பட்டு, ரூபாய் 249 கோடி நிதி விடுவிக்கப்பட்டு பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்படுகிறது.

2020–2021–ஆம் ஆண்டிற்கான 2–ஆம் கட்ட கூட்டத்தில் வேளாண் துறையில் 8 வரப்பெற்ற கருத்துருக்களில் ரூ.83.179 இலட்சங்கள், மாநகராட்சி நிருவாகத் துறையில் 58 வரப்பெற்ற கருத்துருக்களில் ரூ.991.9000 இலட்சங்கள், ஊரக வளர்ச்சித் துறையில் 34 வரப்பெற்ற கருத்துருக்களில் ரூ.1930.070 இலட்சங்கள், 16 கருத்துருக்கள் கால்நடைவளர்ப்பு துறையில் ரூ.258.500 இலட்சங்கள் தொகைக்கு வரப்பெற்ற கருத்துருக்களில் மாநில அளவு அதிகார மேம்பாட்டுக் குழுவால்

பரிசீலிக்கப்பட்டு சில பரிந்துரைகளுடன் ஒப்புதலுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் ஆட்சியில் மக்களுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம், வனவிலங்கு மற்றும் காடுகளுக்கு கொடுக்கப்படுகிறது.

சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகளை விரைவாகக் கண்காணிக்கும் பொருட்டு இணையதளத்தில் செயல்படும் வகையில் வலை கண்காணிப்பு அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. இதன் வழி கண்காணிப்பு வலுப்படுத்தப்பட்டு இத்திட்டத்தின் பயன்கள் மக்களை சென்றடையும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு செயல்பட்டு வருகிறது.

இத்திட்டம் மலைவாழ் மக்களிடையே மிகச் சிறந்த திட்டம் என்றும் வரவேற்பை பெற்றுள்ள பயனுள்ள திட்டம் என்றும் மண் மற்றும் நீர்பாதுகாப்பு, காடுகள் வன மற்றும் விலங்கினங்களைப் பாதுகாக்கும் திட்டமாக இயங்குவதாக மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் திரு.சி.பொன்னையன் அவர்கள் கூறினார்.

குழுமத் தலைவர் (நிலப் பயன்பாடு)
மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**